**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 10 ம் நாள்
**இ.ம.எண். 3/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 30/2022**

| |
|---|
| மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, தலையுடையவர் கோவில் பத்து, பண்டாரவடை கிராமத்தில் வசிக்கும் மனோகரன் மனைவி வயது 56 உள்ள M. ஆனந்தி. |

..மனுதாரர்/வாதி

//எதிர்//

| | |
|---|---|
| 1. | மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர், பண்டாரவடை கிராமம், காந்தி தெரு, கதவு எண்: 7/44 என்ற முகவரியில் வசிக்கும் முகம்மது ஜுபையர் மற்றும் பதருன்னிசா பீவி இவர்களின் குமாரர் வயது 50 உள்ள திரு.து. அலில் ரஹ்மான். |
| 2. | திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் நகரம், கொளரி மேட்டு 3வது தெரு கதவு எண்.17/10 என்ற முகவரியில் வசிக்கும் சலீம் பாஷா குமாரர் வயது 48 உள்ள சஜித். |

..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

மனுதாரரால் இம்மனுவானது மீண்டும் கோப்பில் எடுக்க தாக்கல் செய்ய ஏற்பட்ட 53 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து அசல் மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொண்டு தகுந்த உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 22.04.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 30.04.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 27.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.K. கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு நன்கு பரிசீலித்தபின் இன்று (10.11.2025) இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ. 3,000/– கொடுக்கவேண்டும் என்றும், மேற்படி தொகையை 10.11.2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தவேண்டும் என்றும், என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

**ஒப்பம் (P. கனிமொழி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**தரங்கம்பாடி.**